# 19

# பாடனுபவித்தல்



# SUFFERING

# 19

## எப்படிப் பாடனுபவிக்கக்கூடாது ?

## HOW NOT TO SUFFER

**1**

எல்லாப் பாடுகளுக்கும் சாத்தானையே பழிசாற்றக்கூடாது.

**2**

ஆத்திரப்பட்டு எதையும் பேசிவிடக்கூடாது.

**3**

உங்கள் பிரச்னை அபூர்வமானது என்றெண்ணக்கூடாது.

**4**

மக்களிடம் எரிச்சலடையக்கூடாது.

**5**

ஒவ்வொரு பிரசங்கியாய்த் தேடியலையக்கூடாது.

**6**

உடனடி விடுதலையையே எதிர்பார்க்கக்கூடாது.

**7**

கடவுளது கடந்தகால உதவிகளை மறக்கக்கூடாது.

**8**

ஜெபத் தியான வாழ்வில் அசதியாகிவிடக்கூடாது.

**9**

வேத வாக்குகளைத் தவறாய் எடுத்தாளக்கூடாது.

**10**

உங்கள் துக்கங்களை வீணடித்துவிடக்கூடாது.

# 19

## எப்படிப் பாடனுபவிக்கக்கூடாது?

### அறிமுகவுரை

■ பாடனுபவித்தலும் விசுவாசித்தலும் இணைகோடுகள் போல —

பிலி 1:29 ... *விசுவாசிக்க மட்டுமல்ல, பாடனுபவிக்கவும்*

இங்கு ஒரு திருத்தம் தரப்படுகிறதல்லவா?

இந்நிருப ஆக்கியோனே இடைவிடா பாடுகளுக்கு
''மாதிரியாய்த்'' திகழுகிறான் (வச 30)

■ இறையரசுக்கு இரு பரிமாணங்கள் —

அ) ஆன்மீக ரீதியான இராஜ்யம் (Spiritual Kingdom)

இயேசு: *''அது உங்களுக்குள் இருக்கிறதே!''* (லூக் 17:21)

ஆ) எழுத்தின்படியான இராஜ்யம் (Literal Kingdom)

இயேசு: *''ஜெபியுங்கள் ... உமது அரசு வருக!''* (மத் 6:10)

ஒன்று இன்றுள்ளது; அடுத்தது இனிவருவது.
இன்றுள்ள இராஜ்யத்திற்கு **வாசல்:**

மறுபிறப்பு (யோ 3)

இனிவரும் இராஜ்யத்திற்குப் **பாதை:**

பாடுகள் (அப் 14:22 ... *அநேக உபத்திரவங்கள்)*

■ பாடுகள் பலவகை —

உடல் ... மனம் ... ஆன்மா ... சார்ந்தவை

எவ்வகையானதாயினும், பாடு பாடுதான்!

எவரும் இதற்குத் தப்பமுடியாது.

■ பாடுகளைக் கையாளும் முறையே நமது முதிர்ச்சியை அளக்கும் —

☐ ஆபிரகாமைக் கர்த்தர் அழைத்ததே

பாடுகளின் காட்சியில்தான் (ஆதி 15:12)

☐ இறைமக்கள் தெரிந்தெடுக்கப்பட்டது

பாடுகளின் *இருப்புக்காளவாயிலிருந்துதான்* (உபா 4:20)

தீயில் மலர்ந்தது வெயிலில் வாடுமோ?

☐ பைபிளிலுள்ள இறுதிப் புத்தகம்

பாடுகளின் சூழலிலேயே தரப்பட்டது (வெளி 1:9)

ஆனாலும் நாம் திகிலடையவேண்டியதில்லை;

ஏனெனில் துவக்கமுதல் முடிவுவரை கடவுள் நம் கரத்தைப் பிடித்திருக்கிறார் —

வெளி 1:17ஆ ... *''பயப்படாதே ...*

*நானே முதலும் கடைசியும்!''*

■ பாடுகள் பற்றிய சில உண்மைகள்:

— பாடுகளில்லாதவர் உலகில் எவருமிலர்.

— பாடுகளைப்பற்றிய போதனைகள் திருமறையில் ஏராளம்.

ஆனாலும்,

பாடு மற்றும் வலியின் புதிரை (mystery of pain) இவ்வுலகில் விளக்கவோ விளங்கிக்கொள்ளவோ முடியாது.

■ முதல் பாவத்தைச் செய்ததிலிருந்து மனிதன் பாடுபடத் துவங்கினான். இந்த யுகத்தின் இறுதிக்குள் வரவர பாடுகள் அதிகரிக்கத்தான் செய்கின்றன ...

— குணப்படுத்தமுடியா வியாதிகள்

— பயங்கர விபத்துக்கள்

— மனநிலைக் கோளாறுகள்

— இயற்கையின் சீற்றங்கள்

— சமுதாயத்தில் குழப்பங்கள்

நல்லோருக்கும் தீயோருக்கும் அப்படியே —

பிர 9:2

பாடுகளுக்கு நாம் தப்பமுடியாது;

அவற்றைத் தாங்கக் கற்கவேண்டும்.

■ ''நாம் பாடுபடுவதேன்?'' என்ற கேள்விக்குப் பதிலளிப்பது அவ்வளவு சுலபமல்ல.

இதற்கான பதிலை விவிலியத்திற்கு வெளியே தேடினால்,
மனதில் குழப்பங்கள் இன்னும் கூடும், குறையாது.

பாடுகளுக்கான **எல்லாப்** பதில்களையும் பைபிள் தருவதில்லை;
ஆனால் பாடுகளைக் கையாளுவதெப்படியெனப்
**போதுமான** போதனை அதிலுண்டு.

- கிறிஸ்துவைப் பின்பற்றத் துவங்குவோர் பலர் பின்வாங்குகின்றனர். ஒரு முக்கிய காரணம் பாடுகளே.

கிறிஸ்தவ வாழ்வு ரோஜா மலர்ப்படுக்கை என்று நினைத்தனர்;
இல்லை, அது ரோஜா செடி!

திருமறை விளக்கும் கிறிஸ்தவ வாழ்வு:
மலர்களைச் சுற்றி முட்களல்ல;
முட்கள் நடுவில் மலர்கள்!

எவ்வளவு சீக்கிரம் இதைக் கற்கிறோமோ,
அந்த அளவுக்குப் பின்மாற்றம் குறையும்.

## எப்படிப் பாடனுபவிக்கக்கூடாது?

**1. எல்லாப் பாடுகளுக்கும் சாத்தானையே பழிசாற்றக்கூடாது.**
Do not blame Satan for all suffering.

- பொதுவாக,
  எல்லாப் பாடுகளும் சாத்தானாலேயே (யோ 10:10);
  ஒவ்வொரு துன்பத்திற்குமோ அவனே **நேரடிக்** காரணனல்ல.

- இயேசுவின் விடுதலை ஊழியத்திலிருந்து எடுத்துக்காட்டுகள் —

அ) செவிடும் ஊமையும்

மாற் 9:22 ... *தீயிலும் தண்ணீரிலும்* ...
செவிடும் ஊமையுமான எல்லாரும் அப்படிச் செய்யார்!
இயேசு அந்த *''ஆவியை''* அதட்டினார் (வச 25,26)

செவிடும் ஊமையுமான இன்னொருவனுக்கு அவர்
அப்படிச் செய்யவில்லை —

மாற் 7:32-35,37 (அதே சுவிசேஷம்)

ஆ) பலமிழந்த நிலை

☐ ஓர் ''ஆவியினால்'' உண்டானது (ஒரு பெண்)
லூக் 13:11,12,16 ... *18 ஆண்டுகள் ... சாத்தானின் கட்டு* ...

☐ ஒரு ''பாவத்தினால்'' உண்டானது (ஓர் ஆண்)
யோ 5:5,12,14... *38 ஆண்டுகள்... இனிப் பாவம் செய்யாதே*

- மிஞ்சிய வேலையினாலும் வியாதி வரலாம் —
  (உ-ம்) எப்பாப்பிரோதீத்து (பிலி 2:25,30)
  ''கடவுளின்'' *இரக்கமே* வேண்டப்பட்டது;
  சாத்தான் குற்றம் சாட்டப்படவில்லை.

- முதிர்வயதின் வியாதிகளும் உண்டு —
  இது ''தேய்மானத்தால்'' (wear & tear) ஏற்படுவது.

எனவேதான் படைத்தவரை இளம் வயதிலேயே
நினைக்கவேண்டும்—

பிர 12:1,6,7

வசனங்கள் 2-5இல் காணுவது —

பார்வை இழப்பு,
பற்கள் விழுதல்,
காது கேளாமை, முதலியன

(உ-ம்) எலிசாவின் முதிர்வயது வியாதி, மரணம் (2 இரா 13:14அ)

■ நிதானித்துப் **பகுத்தறியும்** திறனுக்காய் ஜெபிக்கவேண்டும்

அ) பகுத்தறியும் வரம் (1 கொரி 12:10)
ஆ) பகுத்தறியும் கலை (எபி 5:14)

''வரம்'' எல்லாருக்கும் கிடையாது;
''கலையிலோ'' எல்லாரும் வளரவேண்டும்.

■ சாத்தானிடமிருந்தே ஒரு பாடு வந்திருப்பதாய்த் தெரிந்தாலும், நாம் அவனைக் ''குற்றப்படுத்தவோ பழிக்கவோ'' கூடாது.

□ யோபு: அவனைத் தாக்கியது சாத்தான்தான் (யோபு 2:7)

யோபுவோ அதற்கும் அப்பாற்பட்ட, மேற்பட்ட இறைவன்மையையே நினைத்துக்கொண்டிருந்தான் (யோபு 1:21;2:10)

கடவுளுக்கும் சாத்தானுக்கும் நடந்த
யுத்தம்தான் யோபுவின் சரிதை —

யோபுவின் உடல்தான் யுத்தக்களம்!

இரு யானைகள் மோதிக்கொள்ளும்போது,
நாசமாகுவது கீழிருக்கும் புல்தரைதானே?

□ அதுபோலவே, பவுலின் முள்: *''சாத்தானின் தூதன்''* (2 கொரி 12:7)
பவுலோ சாத்தானைக் கடிந்துகொள்ளவில்லை —
மாறாக, அவன் ***''கர்த்தரிடம்*** *வேண்டினான்''* (வச 8)

☐ இறுதிக்காலத்திற்குக் கிறிஸ்து தரும் அறிவுரை:

வெளி 2:10 ... சாத்தானைக் கடிந்துகொண்டு அல்ல,
**மரணம்** வரை உண்மையாயிருக்கவேண்டும்—
நீங்கள் கொல்லப்படலாம் என்றுதானே பொருள்?

■ பாடுகளுக்கு இன்னும் சில காரணங்கள் —

அ) பரீட்சைகள், உபத்திரவங்கள்
(Trials & Tribulations)

ஆ) பாவச் சோதனைகள்
(Temptations)

**பாவச் சோதனைகள்** வருவது சாத்தானிடமிருந்தே — யாக் 1:13

☐ வனாந்திரத்தில் இயேசு:
(இறைச்சித்தத்திற்கு எதிராய்ச் செல்ல சோதிக்கப்பட்டார்)
*"அப்பாலே போ, சாத்தானே!"* (மத் 4:10)

☐ தனது நிருபத்தில் யாக்கோபு:
*"தேவனுக்குக் கீழ்ப்படிந்து ... பிசாசுக்கு எதிர்த்து"* (யாக் 4:7)
சூழமைவு: *"பாவம் ... சுத்திகரி ... பரிசுத்தப்படுத்து"* (வச 8-10)

(பார்க்க: பக்கங்கள் 89-91, 338-340)

## 2. ஆத்திரப்பட்டு எதையும் பேசிவிடக்கூடாது.
Do not be rash with your mouth.

- பேச்சுத் திறன் கடவுள் தந்த ஈவு.

  நமது ''வார்த்தைகளை'' அவர் கருத்தாய்க் கவனிக்கிறார் — மத் 12:36

  ... *ஒவ்வொரு வீண் வார்த்தை ... நியாயத்தீர்ப்பு ...*

  எனவேதான் தாவீது இவ்விதம் ஜெபித்தான் — சங் 19:14

  *என் வாயின் சொற்கள் உமக்கு ஏற்புடையதாயிருக்கட்டும்*

- பாடுகளின் வேளைகளில் நாம் பேசுபவற்றைக் குறித்துக் கடவுள் கூடுதல் கண்டிப்புடனிருக்கிறார் —

  (உ-ம்) யோபுவின் சரிதை

  அவனது நண்பர்மீது கடவுளின் முடிவான தீர்ப்பு —

  யோபு 42:7ஆ, 8ஆ ... *நீங்கள் நிதானமாய்ப் பேசவில்லை ...*

  யோபு பேசியவைகளைத் துவக்கமுதலே ஆண்டவர் கவனித்திருந்திருக்கிறார் — (2:10இ)

  *இவையெல்லாவற்றிலும் ... உதடுகளால் பாவம்செய்யவில்லை*

  யோபு தனது பிறந்த நாளைச் சபித்தானே எனக் கேட்கலாம்?

  3:1-3 (இவ்வத்தியாயம் முழுவதும் அதே புலம்பல்தான்!)

  அவனது உடலில் வேதனை தாங்கமுடியாததாயிருந்தது —

  2:7,8 ... *எரியும் புண்கள் ... உள்ளங்கால் ... உச்சந்தலை*

  7:5 ... *தோல் வெடித்தது ... சீழ் வடிந்தது*

  (ஆற்ற முடியாத தீப்புண்கள் போல)

  இவ்விதத் தவிப்பின் வார்த்தைகள் தேவனுக்குப் புரியும் —

  ரோ 8:22,23 ... *''நமக்குள்ளே தவித்து ...''*

  :26 ... *''ஆவியானவரும் ... பெருமூச்சுகளுடன்''*

''தேவனைப்'' பற்றிய வார்த்தைகளிலோ யோபு கவனமாயிருந்தான் —

யோபு 1:22;42:7ஆ, 8ஆ ... *''என்னைப் பற்றி ...''*

■ யோபுவைத் தவிர்த்து இரு சிறந்த எடுத்துக்காட்டுகள் —

☐ யோசேப்பு

அவன் அமைதியாகவே இருந்தான் ...

— குழிக்குள் போடப்படுகையில் ...

— சிறைக்குள் தள்ளப்படுகையில் ...

(போத்திபாரின்முன் வாதிடவில்லை)

''நெருப்பில்லாமலா புகைந்திருக்கும்''

எனப் பலரும் பேசியிருப்பர்!

நாமே நெருப்புண்டாகக் காரணமாயிருக்கக்கூடாது;

மக்கள் நெருப்புண்டாக்கினாலோ

நாம் ஒன்றும் செய்யத் தேவையில்லை!

கடவுள்மீதே யோசேப்பு நங்கூரமிட்டிருந்ததால்,

அவன் பதறாது அமைதியாயிருந்தான் (ஆதி 50:20)

அப்படியே —

☐ இயேசு (1 பேது 2:21-23) ... *அவர் வாயில் வஞ்சனையில்லை*

மக்களின் வார்த்தைகள் நம்மை —

அம்புகள்போல் குத்தலாம் ...

வாள்கள்போல் வெட்டலாம் ...

கற்கள்போல் காயப்படுத்தலாம் ...

இயேசுவின் உணர்வுகளைக் கவனியுங்கள் — சங் 41:8,9

இதோ நமக்கோர் எச்சரிப்பு:

இக்கட்டில் தவிக்கும் திருத்தொண்டர்

எவருக்கும் விரோதமாய்ப் பேசாதீர் — ரோ 14:4

*''இன்னொருவரின் வேலையாளைக் குற்றப்படுத்த நீ யார்?''*

துன்பப் புயல் உங்கள் பக்கம் திரும்பிவிடலாம், கவனம்!

*"நீங்கள் தீர்க்கிறபடியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்"* ... மத் 7:1,2

- இருள் சூழ்ந்த, நம்பிக்கையற்ற, வேளைகளில்

நாம் பேச வேண்டியது —

அ) *"தேவன் அறிவார்"* என்று சொல்லுங்கள்! யோபு 23:8-10

ஆ) நித்தியத்திற்கடுத்த திருவாக்குகளை அறிக்கையிடுங்கள்:

— கொடிய வியாதியாயிருக்குமானால் ...

யோபு 19:25-27 ... *என் மீட்பர் உயிரோடு ...*

*என் தோல் அழுகி ...*

1 கொரி 15:53,54 ... *அழிவுக்குரியது ... அழியாமையுள்ளது*

*... சாவுக்குரியது ... சாவாமையுள்ளது ...*

— நெருங்கிய ஒருவர் இறந்துபோனால் ...

(உ-ம்) பிள்ளை செத்தபோது தாவீது ...

திடப்படுத்திக்கொண்டான் ... 2 சாமு 12:22,23

இதுவே பவுலின் போதனை :

1 தெச 4:16இ ... *கிறிஸ்துவுக்குள் மரித்தோர் முதலாவது ...*

இதுவே உண்மையான *"தேற்றுதல்"* (வச 18)

இவ்விதம் எதுவுமே பேச முடியாவிடினும்,

*"மவுனமாயிருங்கள்"* — புல 3:27,28

## 3. உங்கள் பிரச்னை அபூர்வமானது என்றெண்ணக்கூடாது.

Do not think your problem is unique.

- வேறு வார்த்தைகளில்,

  இவ்வுலகில் பாடனுபவிப்பவர் நீங்கள் மட்டுமல்ல!

  சுயபரிதாபம் பாடுகளைப் பன்மடங்காக்கும்;

  மனத்தளர்வும் மனத்தொய்வுமே முடிவாகும்.

- முதலாவது,

  நாம் திருத்திக்கொள்ளவேண்டிய தவறான எண்ணம் —

  நல்லோருக்கு ஆசீர்வாதங்கள் ...

  தீயோருக்குப் பாடுகள் ...

  இது பைபிள் போதிப்பதற்கு முற்றும் எதிரானது —

  *பாடுபட "அழைப்பு"* (பிலி 1:29)

  *உபத்திரவப்பட "நியமிப்பு"* (1 தெச 3:3)

  இதுதான் சீடத்துவத்திற்கு அடிப்படை நிபந்தனை —

  *எவனும் "தனது" சிலுவையை எடுக்காவிடில் ...* (லூக் 9:23)

  *"சிலுவை"* = பாடு/வலி/வேதனை/அவமானம்

  *"தனது" சிலுவை* = ஒவ்வொருவருக்கும் சிலுவையுண்டு!

  (இது கிறிஸ்துவின் சிலுவையல்ல!)

- பாடுகளில் எதுவும் *"புதுமை"* என்றெண்ணக்கூடாது —

  1 பேது 4:12

  மற்றவர்களும் ***இதே விதமாய்த்தான்*** பாடுபடுகின்றனர் —

  1 பேது 5:9

  (உ-ம்) யூதேயாவிலுள்ளோர் பாடுபட்டதுபோல —

  1 தெச 2:14,15

  பாடுகளுக்குக் காரணம் எதுவாயினும், எவராயினும் ...

  *"யூதரோ புறவினத்தாரோ"*

■ *''பச்சை மரமே''* இவ்வளவு பாடுபடுமானால்,

*''பட்ட மரமாகிய''* நாம் எம்மாத்திரம்? (லூக் 23:31)

கிறிஸ்து எவ்வளவு பாடனுபவித்தாரென எண்ணினால்,

நாம் சோர்வடையோம் — எபி 12:3

*... அவரை நினையுங்கள் ... எதிர்ப்புகள் ...*

— மக்களிடமிருந்து இயேசு பரிதாபம் நாடவில்லை.

தமது பாடுகளைவிட அவர்களது துன்பங்கள் அதிகமாயிருக்கும் என்றறிந்திருந்தார் —

லூக் 23:27-31 ... *எருசலேமின் மகளிரே,*

*''மலடிகள் பாக்கியவதிகள்!''*

என்னே நிலைமை!

(உ-ம்) ''பாதங்களே இல்லாத ஒருவனைப் பார்க்கும்வரைதான்
புதுக்காலணிகள் இல்லையே எனப் புலம்பினேன்!''

■ எபி 11 — விசுவாச வீரர்

அடுத்த அத்தியாயத்திலேயே —

எபி 12 — பாடுகளின் பாக்கியம்

அதாவது, விசுவாசத்தினால் ஆசி பெறுவதெப்படி என்பதல்ல,
பொறுமையோடு பாடுகளைச் சகிப்பதெப்படி என்பதே
எபி 12இல் விளக்கப்பட்டுள்ளது!

ஒருவரும் விதிவிலக்கல்ல —

எபி 12:6,7 ... *''எந்த'' மகனையும் ... ''எந்த'' மகன்?*

■ 2004 டிசம்பர் 26 அன்று வந்த சுனாமி —

நாகப்பட்டினத்தில் பரமேஸ்வரன் என்ற தம்பதியரின்
மூன்று செல்லப் பிள்ளைகளையும் கடலின் சீற்றம்
வாரிக்கொண்டு போனது.

ஒரு சில நாட்கள் கழித்து இவர்களைச் சந்தித்தோம் —
கடற்கரையில் பிள்ளைகளை இழந்த அதே இடத்திற்கு
எங்களை அழைத்துச் சென்றனர்!

கேள்வி: ஏன் இந்தச் சோக நிகழ்வு?

எனது பதில்: 2 கொரி 1:3-5

*பிறரைத் தேற்றவே கடவுள் நம்மைத் தேற்றுகிறார் ...*

பெற்றோரை இழந்த 20 பிள்ளைகளை இத்தம்பதியர் தத்தெடுத்தனர்; அடுத்த சில ஆண்டுகளில் சகோதரிக்கு இன்னும் இரு பிள்ளைகள் பிறந்தனர்; தங்கள் இல்லத்தில் இப்போது 22 பிள்ளைகள் என்று கர்த்தரில் இத்தம்பதியர் அகமகிழ்கின்றனர்!

காயப்பட்டோரே காயங்கட்ட தேவை!
நாம் பாடுபடுமளவிற்கே பிறர்க்கு உதவமுடியும் (வச 5)

- எனது சொந்த சாட்சி —
பிறப்பின்போது ஆயுதத்தால் மகளின் வலதுகை சேதம்.
கை காலே இல்லாது, ஊனமாய்ப் பிறக்கும் சிசுக்களைப் பார்த்து அமைதியானேன்.

- இவ்வித இடங்களுக்குச் சென்றுவாருங்கள் —
இளம்பிள்ளைவாத இல்லங்கள் (Polio Homes)
மனநிலை குன்றியோர் இல்லங்கள்
தொழுநோயாளிகள் மையங்கள் (Leprosariums)
மருத்துவமனை சந்திப்பு ஊழியம் நம்மைச் சீர்ப்படுத்தும்.

- நம்மில் அநேகருக்கு வியாதியே பெருந்தீனியினாலேயே ...
இதுதான் நமக்குக் கவலை;
வறுமைக்கோட்டிற்குக் கீழிருப்போரையோ நினைக்கவே மாட்டோம்.
(அதாவது, நாளொன்றுக்கு ஒரு முழு சாப்பாடுகூட கிடையாதோர்)

- வசதி, வாய்ப்பு இல்லாதோரோடு பழகுங்கள்.
(உ-ம்) இல்லாதோரோடு இயேசு ...
உணவு, உடை, உறைவிடம் இல்லாதோர் ... (மத் 25:35-44)
பிறரது பிரச்னைகளுக்காய் ஜெபியுங்கள் : யோபு 42:10
உங்கள் பாடுகளையே நினைத்துக்கொண்டிருக்காதீர்!

- **முடிவுரை**

1 கொரி 10:13 ... மனிதனுக்கு வராத பிரச்னைகளா, பாடுகளா?
*"தேவனோ நம்பத்தகுந்தவர்!"*

## 4. மக்களிடம் எரிச்சலடையக்கூடாது.
Do not get irritated with people.

■ நாம் துன்புறும்போது நம்மை அதிகம் புண்படுத்துவது:
நமது துன்பத்தை மக்கள் பாராமுகமாய் இருப்பது —
(உ-ம்) யோபு 19:13-19 ... *நண்பர், குடும்பத்தினர்*

இதுவே தாவீதின் அனுபவமும் —
சங் 38:11 ... *இனத்தார் தூரத்தில் நிற்கின்றனர்*
69:8 ... *என் சகோதரர்க்கும் அந்நியன்*

சங்கீதங்களில் தாவீது பல முறை இப்படிச் சொல்லுகிறான்.
வச 20 ... *பரிதபிப்பவன் ஒருவனுமில்லை*

□ ஒரு கேள்வி:

யோபுவின் நண்பர் அவனோடுதானே இருந்தனர்?

ஆம், ஆனால் அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
— *''பயனற்ற மருத்துவர்''* (யோபு 13:4)
— *''புண்படுத்தும் தேற்றுவோர்''* (16:2)
— *''வெற்று ஆலோசகர்''* (21:34)

■ இன்னலில் உதவவே கடவுள் நமக்கு
நண்பரையும் குடும்பத்தினரையும் தந்துள்ளார் —
நீதி 17:17 ... *ஆபத்தில் உதவவே சகோதரன்*

ஆனாலும், உதவும் மனிதரை நம்மைவிட்டுப் பலவேளைகளில்
அகற்றுவதும் **தேவனே** —

யோபு: *''அவர்'' தூரப்படுத்தினார்* (யோபு 19:13)
தாவீது: *''நீர்'' தூரமாய் விலக்கினீர்* (சங் 88:8,18)
இதன் நோக்கம்தான் என்ன?

— கடவுள் நமது ஆன்மீகத் தசைகளை வலுப்படுத்த விரும்புகிறார்

நீதி 24:10 ... *உன் பலம் குறுகியது ...*

ஏசா 59:16 ... *அவரது புயமே ...*

☐ இது இயேசுவுக்குக் கெத்செமனேயில் நடந்தது ... மத் 26:45,56ஆ

*... சீடர் ... தூங்கினர் ... அவரை விட்டோடினர் ...*

அவரோ அவர்களைக் கசந்துகொள்ளவில்லை!

இதுதான் ''தனிமையின் ஒழுக்கம்'' (Discipline of Loneliness).

உங்களைப் பலப்படுத்திக்கொள்ளுங்கள் —

எபி 12:12,13 ... *கரங்கள் ... முழங்கால்கள் ... பாதங்கள்*

வேலை (Work) — தொழுகை (Worship) — நடை (Walk)

☐ இன்னோர் எடுத்துக்காட்டு:

யோசேப்பின் உடன் கைதிகள் அவனது வேண்டுகோளை மறந்தனர் —

மது பரிமாறுவோரின் தலைவன்: ஆதி 40:13,14,23

இன்னும் *''ஈராண்டுகள்''* யோசேப்பு காத்திருக்க (41:1),

பின்புதான் மறந்தவன் நினைத்தான் (41:9)

தம்மீது மட்டுமே நாம் சார்ந்திருக்கவேண்டிய நிலைக்குத் தேவன் நம்மைக் கொண்டுவந்து விடுகிறார்.

■ மக்களது நிந்தனைகளைப் பொருட்படுத்தாதீர்!

(உ-ம்) மத் 27:39-44

→ இயேசு *பிரசங்கித்ததைச்* சுட்டிக்காட்டி (வச 40அ)

→ அவர் *உரிமைப்படுத்தியதைச்* சுட்டிக்காட்டி (வச 40ஆ)

→ அவரது அபிஷேகத்தைக் கேள்விகேட்டு (வச 42ஆ)

→ இயேசுவின் விசுவாசத்திற்கே சவாலிட்டு (வச 43ஆ)

ஸ்தேவான் போல் இனிமையாயிருங்கள் — அப் 6:15 (தேவதூதன்)

7:54-56 (விண்மகிமை)

■ இக்கட்டு வேளைகளில் மக்கள் போதுமான அளவு உதவாதிருந்தால் அமைதி, இனிமை காப்பதெப்படி —

☐ பிறர் துன்பத்தில் நாம் போதுமான அளவு உதவவில்லை ...

*''பிறர் உங்களுக்குச் செய்ய நீங்கள் விரும்புவதையே ...''*

(மத் 7:12)

கிறிஸ்துவானவருக்கும் ஆவியானவருக்கும் பல பெயர்கள்;
ஆனால் இருவருக்கும் பொதுவான பெயர் —
*''தேற்றரவாளர்'' ''உதவியாளர்''* (யோ 14:16)

இதுவே நமது அடிப்படை அழைப்பு: தேற்ற ... உதவ ...

கிறிஸ்துவானவர் நம்மில் குடிகொண்டிருந்தால்,
ஆவியானவர் நம்மை நிறைத்திருந்தால்,
நாமும் இதையே செய்யவேண்டும்.

☐ கவலைப்படுவதற்கு அவரவர்க்கு அவரவர் பிரச்னை!

☐ திரும்பத் திரும்பக் கர்த்தரிடமே திரும்புங்கள் —

மீகா 7:5,6 ...*நண்பன் ... துணைவன் ... மகன்*
*மகள் ... மருமகள்*
*மாமியார் ... சொந்த வீட்டார்*
:7 ... *''கர்த்தரையே''* நோக்குவேன்!

■ சகோதரன் பிரகாஷ் இயேசுவடியானின் (1944-2014) பாடல்:

*மனிதர் என்னைக் கைவிட்டாலும்,*
*மாமிசம் அழுகி நாறிட்டாலும்,*
*ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்,*
*ஆகாதவன் என்ற தள்ளிவிட்டாலும் —*

*இயேசு போதுமே, இயேசு போதுமே,*
*எந்த நாளிலுமே, எந்நிலையிலுமே,*
*எந்தன் வாழ்வினிலே, இயேசு போதுமே!*

## 5. ஒவ்வொரு பிரசங்கியாய்த் தேடியலையக்கூடாது.
Do not go from preacher to preacher.

- பிரச்னைகள், பாடுகளுக்கு நீடித்த தீர்வையல்ல,
  உடனடி நிவாரணத்தையே தேடுவது நமது வழக்கமாகிவிட்டது.
  இதற்காய், ஒரு பிரசங்கியிடமிருந்து மறு பிரசங்கியிடம் ஓடுகிறோம்.
  பிரசங்கிமாரிடம் நாம் போவதற்கு மூன்று காரணங்கள் —

**அ) அவர்களது ஜெபம் நாடி ...**

இதில் தவறேதுமில்லை.
மேலான வழிமுறையோ யாக் 5:13-16இல் தரப்பட்டுள்ளது.
முதலாவது — ''தனி'' ஜெபம் (வச 13)
... ***அவன்*** *ஜெபம்பண்ணட்டும்* ...
இரண்டாவது — *''மூப்பரது''* ஜெபம் (வச 14)
அதாவது, *சபை*
மூன்றாவது — *''ஒருவருக்காயொருவர்''* ஜெபம் (வச 16)

பழைய ஏற்பாட்டில், மக்களுக்காய் மோசே ஜெபித்தான்;
மக்களுக்காய் ஆரோன் ஜெபித்தான்.
மோசே — ஒரு தீர்க்கன்
ஆரோன் — ஓர் ஆசாரியன்

ஆனால் அவர்கள் தங்களுக்காய் மக்களை ஜெபிக்கக் கேட்டதாக எழுதப்படவேயில்லை;
புதிய ஏற்பாட்டிலோ, தனக்காய் ஜெபிக்கும்படிப் பவுல் அடிக்கடி மக்களைக் கேட்டான் —

*''எனக்காய் ... என்னோடு போராடுங்கள்''* (ரோ 15:32)
*''எனக்காய் விண்ணப்பம்பண்ணுங்கள்''* (எபே 6:20)
(பரஸ்பர ஜெப உதவி)

வந்துபோகும் ஊழியரது ஜெபங்கள் எப்பொழுதுமல்ல,
எப்பொழுதாவது இருக்கலாம். இந்த விதிமுறை மீறப்படுமானால்,
மார்க்கம் வணிகமயமாகும் —

லூக் 20:46,47

*... விதவைகளின் வீடுகள் ... நீண்ட ஜெபங்கள் ...*

தீராத பிரச்னைகளும் நீங்காத வியாதிகளும்
பிரசங்கிமாருக்கும் உண்டு என்பதை மறந்துவிடாதீர்!

**ஆ) அவர்களது ஆலோசனை நாடி ...**

இரு ஓரங்கள் தவிர்க்கப்படவேண்டும்:
ஆலோசனையின்மை, மிஞ்சிய ஆலோசனை.

நீதி 11:14;15:22 ... ஆலோசகர் *''இல்லை'' ... ''அநேகர்''*
*... ''அநேக'' ஆலோசகர்*

ஆலோசனை அவசியம் எனவே இது வலியுறுத்துகிறது.

அளவுக்குமீறி ஆலோசனை கேட்டால் குழம்பிப்போவீர் —
எது சரியெனத் தெரியாதுபோய்விடும்!

— உங்களை வசப்படுத்தும் ஊழியருக்கு எச்சரிக்கை (2 கொரி 7:2,3)
*''உண்மை'' ஊழியரிடம்* மட்டுமே மனதைத் திறக்கலாம்.

—''ஏன்'' என்ற பெரும்பாலான கேள்விகளுக்குப் பதில் கிடைக்காது —

☐ அமைதியாய்ச் சிந்திக்க நேரமெடுங்கள்
புல 3:27,28,40,41

☐ இறைப்பிரசன்னத்திற்குள் நுழையும்வரைதான் குழப்பம்
சங் 73:16,17

☐ கர்த்தருக்குக் ''காத்திருங்கள்'' — அவசரப்படாதிருங்கள்
சங் 27:14; பிலி 4:6,7

**இ) அவர்களது உதவி நாடி ...**

உதவி வாக்களிப்போர் இக்கட்டு வேளையில்
பொதுவாகக் கைவிட்டுவிடுவர்!

பிரசங்கிமார் ''ஊற்றுக்கள்'' அல்ல;

நமது ஊற்றானவர் தேவனே —

- ☐ சங் 121:1,2 ... *''எனக்கு ஒத்தாசை ... தேவனிடமிருந்து''*
- ☐ எபி 4:14-16 ... *''கிருபாசனம்... எப்பொழுதென்றாலும் ... உதவி''*

ATM ... Any Time Money

ATM ... Any Time Mercy

எதிர்பாரா நபர்களிடமிருந்து கடவுள் உதவி அனுப்புவார் —

☐ தீர்க்கன் எலியா —

லூக் 4:25,26 ... *இஸ்ரவேலில் எத்தனையோ விதவைகள், ஆனால் ...*

☐ நல்ல சமாரியன் (லூக் 10:30-37)

ஆசாரியன் தவறினான் ...

லேவியன் தவறினான் ...

யூதனல்லாதவனே உதவினான்!

தீண்டாமையில் கிடந்த சமாரியன்!

## 6. உடனடி விடுதலையையே எதிர்பார்க்கக்கூடாது.
Do not expect instant deliverance always.

- கிறிஸ்துவின் ஊழியத்தில் சுகமளிப்பு உடனுக்குடனிருந்தது.
கடவுளோ வேறெவர் மூலமும் தமது வல்லமையை
அந்த அளவு வெளிப்படுத்தவில்லை—
அதற்குக் காரணங்களாய் இருக்கக்கூடியவை:

அ) போதுமான அர்ப்பணிப்பின்மை

இவ்வுலகில் இயேசு நுழைந்தபோது —
*''உம் சித்தம் செய்யவே ... தேவா''* (எபி 10:7)
லாசருவின் கல்லறைமுன் —
*''பிதாவே, எப்பொழுதும் ... செவிசாய்க்கிறீர்''* (யோ 11:41,42)

பிதாவின் அதிகாரத்திற்கு இயேசு 100% அடிபணிந்திருந்ததால்,
பிசாசு, இயற்கையின் மீது அவர் 100% அதிகாரம் செலுத்தமுடிந்தது.

ஆ) மகிமையைக் கையாளத் திறமையின்மை

மத் 9:8 ... *''இவ்வித அதிகாரம் மனிதனுக்கு ...
தேவனுக்கு மகிமை''*

கடவுள் தமது மகிமையை எவருடனும் பகிரமாட்டார்.
அவர் பெயரே *''எரிச்சலுள்ளவர்''* என்பது (யாத் 34:14)

நமது ஜெபம் இப்படியிருக்கவேண்டும் —
*''எங்களுக்கல்ல, கர்த்தாவே, எங்களுக்கல்ல!''* (சங் 115:1)
''உமது மகிமையை நான் ஒருபோதும் தொடாதிருக்கட்டும்!''

- **உடனடி** விடுதலை எதிர்பார்ப்பது இயல்பானதே—
அவ்வாறே ஜெபிக்கலாம், ஆனாலும் காத்திருக்கப் பழகவேண்டும்—

2 கொரி 4:16-5:1 ... *''இலகுவான உபத்திரவம்''* ...
*''நாளுக்கு நாள்''* ... *''அதிசீக்கிரம்''*

அதாவது, **முடிவான** விடுதலையை எதிர்நோக்கி ...

பாடுகளின் பள்ளியில்தான் பொறுமையைக் கற்கிறோம் —

யாக் 5:10,11 ... *எடுத்துக்காட்டு ... துன்பம் ... பொறுத்தல் ...*

- கடவுளது வழிகளைத் தெளிவாய்ப் பார்க்கக் கண்களைக் கண்ணீர் கழுவுகிறது —

அவர் விரும்புவதை நாம் **கற்கும்வரை**
பாடுகளுக்குள்ளேயே கடவுள் நம்மை வைக்கிறார் —

ஏசா 30:20,21 ... போதனையும் திருத்தமும் ...
*துன்பத்தின் அப்பம் ... உபத்திரவத்தின் தண்ணீர்*

சங்கீதக்காரன்: *''நான் கற்றுக்கொள்ளும்படி உபத்திரவப்பட்டது ...''*
வெறுமனே வாசிக்கும்படி அல்ல! (சங் 119:71)

மனுவுருவில் இயேசுவும்கூட பாடுகளின் பள்ளி வழியாகவே
செல்லவேண்டியதிருந்தது (எபி 5:8)
*... பட்ட பாடுகளால் ... கற்றுக்கொண்டு ...*

கர்த்தரால் போதிக்கப்படும்வரை துன்ப நாட்கள்!
*... சிட்சித்து ... போதித்து ... அமர்ந்து ...* (சங் 94:12,13)

(உ-ம்) 11 நாட்களில் கடக்கவேண்டியது 40 ஆண்டுகள் பிடித்தது—
ஏன்? இரு பாடங்களைக் கற்பிக்க: உபா 8:2-5

அ) *மனிதன் உயிர்வாழ்வது உணவினால் மட்டுமல்ல* (வச 3)
ஆ) *மகனைத் தந்தை கண்டித்துணர்த்துவதுபோல்* (வச 5)

- அநேக நேரங்களில், துன்பத்தில் ''இருந்து'' விடுதலை அல்ல;
துன்பத்தின் ''நடுவிலேயே'' வெற்றி!

(உ-ம்) பவுலின் முள்: மும்முறை வேண்டல் (2 கொரி 12:9,10)
இதில் வெற்றியென்பது எது?

அ) சோர்ந்துபோகாமல் பெருமிதங்கொள்ளல் (வச 9)
ஆ) கவலைப்படாமல் களிகூருதல் (வச 10)

(''இன்னலில் இறையருள்,'' *நாளொரு மேனி,* 16 ஆகஸ்டு)

■ அப்படியே விடுதலை கிடைத்தாலும்,

எந்த விடுதலையும் இன்று முழுமையுமல்ல, நிரந்தரமுமல்ல —

(உ-ம்) லாசரு திரும்ப சாகத்தானே வேண்டும்?

☐ நமது *சரீர மீட்பு* இனிவரும் காலத்தில்தான் (ரோ 8:22,23)

☐ புதிய வானம் புதிய பூமியில்தான் *"இனி" கண்ணீரில்லை*

வெளி 21:3-5 (இன்று கண்ணீர் **ஓரளவுதான்** துடைக்கப்படும்)

■ நமது தேவன் அற்புதங்களின் தேவன்தான்;

ஆனால் அற்புதம் வேண்டுமா, எப்பொழுது, என்றெல்லாம்

தீர்மானிப்பவர் அவரே—

அவர் ஏகாதிபத்தியர்! (Sovereign)

■ பாடுகளின் பள்ளியில்,

கடவுள் நமக்குக் கற்பிக்க விரும்புவது — (ஏசா 50:10)

"இருட்டில் ஒழுக்கம்" (Discipline of Darkness)

... *சொல் கேட்டு ... ஒளியில்லை ... இருட்டு ... நம்பி ... சார்ந்து*

நீங்களே வெளிச்சம் உண்டாக்கிக்கொள்ள முயலாதீர்! (வச 11)

— அது இன்னும் *"வேதனை"* உண்டாக்கும்.

## 7. கடவுளது கடந்தகால உதவிகளை மறக்கக்கூடாது.

Do not forget God's help in the past.

- இஸ்ரவேலரைக் கடவுள் எகிப்திலிருந்து விடுவித்து, வனாந்திரத்தில் காப்பாற்றி நடத்தியது வரலாறு காணாதது.

  அவர்களோ அனைத்தையும் சீக்கிரம் மறந்தனர் —

  சங் 106:10-14 ... முதலில் *பாடினார்கள்* (யாத் 15:21)

  ... பின்னர் தேவனைப் *பரீட்சித்தனர்* (வச 24)

- நமது முன்னோரைக் கடவுள் நடத்திய விதத்தை நாம் நினைவுபடுத்தவேண்டும் —

  ☐ *"ஆபிரகாமின், ஈசாக்கின் தேவன்"* என்று யாக்கோபு நினைவுகூர்ந்தான் — ஆதி 32:9,10

  நாம் இன்று சொல்லவேண்டியது —

  *"ஆபிரகாமின், ஈசாக்கின், யாக்கோபின் தேவன்"*

  அப்படித்தான் அவர் தம்மை வெளிப்படுத்தினார் — யாத் 3:13-15

  நேற்றைய தேவனே

  இன்றைய தேவனாய் இருக்கிறார்,

  நாளைய தேவனாய் இருப்பார்!

  வெளி 1:8 ... *"இருந்தவர் ... இருக்கிறவர் ... வருகிறவர்!"*

  ☐ மோசேயின் பாடல்: உபா 32:1-43

  *"பூர்வ நாட்களை நினையுங்கள் ... முற்பிதாக்கள்"* (வச 7)

  ☐ அவ்விதமே, "எலியாவின் தேவனை" எலிசா நினைவுபடுத்தினான்!

  *"யோர்தானைக் ... கடந்து ..."* (2 இரா 2:14)

- நமக்குச் சங்கீதம் 103 அலாதிப் பிரியம்; ஜெபித்து முடிக்கையில் முதலிரண்டு வசனங்களைச் சொல்லுவோம்:

  *"கர்த்தரை ஸ்தோத்திரி"* — இதைச் சொல்வதில் சிரமமில்லை.

  *"சகல உபகாரங்களையும் மறவாதே"* — இங்கு தவறுகிறோம்.

*அவரது "சகல" உபகாரங்கள்* — கடந்த காலத்தில் செய்தவை —

+ *"மன்னித்து"* (வச 3அ) ... ஆன்மீக ஆசீர்வாதம்
+ *"குணமாக்கி"* (வச 3இ) ... உடலுக்கடுத்த ஆசீர்வாதம்
+ *"உயிரை"* (வச 4அ) ... உயிர் பிழைக்க ஆசீர்வாதம்
+ *"கிருபை, இரக்கங்கள்"* (வச 4அ) ... மனதுக்கு ஆசீர்வாதம்
+ *"வாய் ... நன்மை"* (வச 5அ) ... பொருளாதார ஆசீர்வாதம்

முக்கியமாக, சூழ்நிலை சாதகமற்றிருக்கும்போது இவற்றையெல்லாம் நினைக்கவேண்டும் — *"அவரது கோபம்"* (வச 9)

■ பொருளாதார நெருக்கடியா?

மாற் 8:17-21 ... *"எத்தனை கூடைகள்?...?...?"*
எத்தனைபேர் சாப்பிட்டனர் என்றல்ல, மீதம் எவ்வளவு?
(இவ்வசனப் பகுதியில் எத்தனை கேள்விகள், பாருங்கள்!)
*"**எண்ணிப்பார்** நீ பெற்ற பாக்யங்கள்!"*

■ பயமுறுத்தும் எதிரியா?

1 சாமு 17:34-37 ... *சிங்கம் ... கரடி ... ஆட்டுக்குட்டி ...*
*"கர்த்தர் ... அவர் ... கர்த்தர்"*

■ கேள்விகள் நிறைந்த குழப்பச் சூழலா? சங் 77:7-11

தீர்வு: *"நினைவுகூருங்கள்"* (வச 11)
*"பேசுங்கள்"* (அறிக்கை/தியானம்) (வச 12)
*"அவர் சமூகம் செல்லுங்கள்"* (வச 13)

விளைவு: வெளிவருகையில் உங்கள் அறிக்கை —
*"நமது தேவன்போல் பெரியவர் யார்?"* (வச 13அ)

(உ-ம்) 1979இல் துபாய்க்குப் பயணமாகும்போது மும்பையில் எனது மனைவியும் நானும் கடவுச்சீட்டுகளைத் தொலைத்தோம். சங் 66:8-14 மூலம் கடவுள் எங்களோடு பேசினார்.
இப்பொழுது எவ்விதப் பயணப் பிரச்னையிலும் பதறாதிருக்கிறோம்!

■ சுயசரிதைகள் மற்றும் வாழ்க்கை சரிதைகளை வாசியுங்கள் —

- பணத் தேவையா? ... ஜார்ஜ் முல்லர்
- வியாதியா? ... ஏமி கார்மைக்கல், ஜோனி எரிக்சன்
- குடும்பச் சிக்கலா? ... வில்லியம் கேரி, ஜான் வெஸ்லி
- நற்செய்திப்பணியில் துன்புறுத்தலா? ... வாட்ச்மேன் நீ

*... Foxe's Book of Martyrs*

ஒரு திருத்தம்:

கடந்த கால வெற்றிகளைச் **சாருவதல்ல**,
ஆனால் அவற்றை **நினைவுபடுத்தி**
நமது இன்றைய விசுவாசத்தைப் பலப்படுத்துவது.

இங்குதான் சிம்சோன் தவறினான் — நியா 16:20
தனக்கு வெற்றிகள் தந்த தேவனையல்ல,
கடந்தகால வெற்றிகளையே சார்ந்துவிட்டான்.

■ **முடிவுரை**

ஓர் அப்போஸ்தல அறிக்கை:

2 கொரி 1:8-10 ... *"தப்புவித்தார், தப்புவிக்கிறார், தப்புவிப்பார்"*

ஏனெனில்,

*இயேசு கிறிஸ்து*
*நேற்றும் இன்றும் என்றும்*
*மாறாதவராயிருக்கிறார்!*

## 8. ஜெபத் தியான வாழ்வில் அசதியாகிவிடக்கூடாது.

Do not slacken devotional exercises.

- சொல்லொண்ணா துயரத்திலிருக்கும்போது,
  அது நீடித்துக்கொண்டேயிருக்குமானால்,
  நமது ஆவியில் இளக்கரித்துப்போகிறோம்—

  நமது நினைவெல்லாம் நமது பாடுகளின் மீதுதான்;
  ஆன்மீகக் காரியங்களில் கவனம் செலுத்துவதில்லை.

  இது எபி 12:10-13இல் சித்தரிக்கப்பட்டுள்ளது —
  *"துக்கம் ... கைகள் ... முழங்கால்கள் ... பாதங்கள்"*

- மூன்று முக்கிய பக்திமுயற்சிகளில் நாம் தளர்ந்துவிடவோ,
  அவற்றை விட்டுவிடவோ கூடாது —

**அ) திருமறைத் தியானம் (Wordstudy)**

- ☐ யோபு 23:10-12 ... *அவரது அடிச்சுவடுகள் ... நெறி ... சாயாமல் ... அவசிய உணவைவிட ...*
- ☐ யோசேப்பு (சங் 105 :17-19)
  *விலங்கு ... இரும்பு ... வசனம் புடமிட்டது ...* (அசைபோட்டான்!)
  வெளிச்சத்தில் கடவுள் உங்களிடம் சொன்னதை
  இருளில் சந்தேகித்துவிடாதீர்!
- ☐ திருப்பாடகன் —
  இறைவார்த்தை குறித்துத் திரும்பத் திரும்ப அவனது அறிக்கை —
  சங் 119:50 ... *சிறுமையில் ஆறுதல்*
  :52 ... *நினைத்து ... என்னைத் தேற்றி ...*
  :54 ... *கீதங்கள் ... பரதேசி*
  :92,93 ... *மனமகிழ்ச்சி ...* ***உயிர்ப்பித்தீர்***

- துன்புறும்போது ஆவியில் தொய்ந்துபோவது இயல்புதான் —
  சங்கீதக்காரன் மும்முறை ஜெபித்தது —
  *"உமது **வார்த்தையின்படி** என்னை **உயிர்ப்பியும்!"***
  (119:25,107,154)

பைபிள் வாசிக்கத் தோன்றாவிடினும், வாசித்துக்கொண்டேயிருங்கள்!

மனத்தொய்வை மேற்கொள்ள பல மனோதத்துவ
வழிமுறைகள் உண்டு;
திருவசனத் தியானத்திற்கு இணையானதோ இல்லை—
ஏனெனில், யோ 6:63 ... ***ஊனியல்பு** ஒன்றுக்கும் உதவாது*
(= மனிதனது வழிமுறைகள்)
*... எனது வசனங்களோ ... ஆவி ... ஜீவன்*

### ஆ) இறைவழிபாடு (Worship)

வேண்டலையும் தொழுதலையும் நிறுத்தாமல்,
ஜெபத்தையும் துதியையும் அதிகரிக்கவேண்டும்.
இல்லையேல் துக்கத்திலேயே அமிழ்ந்து விடுவோம் —
பிலி 4:6,7 ... *கவலை ... ஜெபம் ... ஸ்தோத்திரம்*

பிரச்னை தீரலாம் அல்லது நீடிக்கலாம்;
ஆனால் தேவ **சமாதானம்** தங்கி நிலைக்கும்.

சில எடுத்துக்காட்டுகள் —

☐ தீர்க்கன் ஆபகூக் (ஆப 3:17,18)
*அத்திமரம் ... மகிழ்ந்திருப்பேன் ...*
அவனுக்குப் புதிரான கேள்விகள் ஏராளம் (1:2,13ஆ)

☐ இயேசு (லூக் 22:39-41)
*"வழக்கமாய்"* ஜெபிக்குமிடம் ... *தோட்டம்*

☐ பவுலும் சீலாவும் (அப் 16:23-25)
*... அநேக அடிகள் ... சிறை ... ஜெபம் ... பாடல் ...*

இயேசு பட்ட பாடுகளை அருகிலிருந்து கவனித்த
பேதுருவின் அறிவுரை —
1 பேது 4:12,13 ... பாடுபடுமளவிற்குப் பாட்டு பாடுங்கள்!
*சோதனை ... புதுமை ... களிகூர்ந்திருங்கள்*

கடவுளைத் துதிக்கத் தோன்றும்போது துதியுங்கள் ...
கடவுளைத் துதிக்கத் தோன்றாதபோதும் துதியுங்கள் ...
கடவுளைத் துதிக்கத் தோன்றும்வரை துதியுங்கள்!

**இ) வேலை (Work)**

— முக்கியமாகத் திருப்பணி

துன்புறுகையில் ஊழியத்தில் விறுவிறுப்பு குறைவது இயல்பு.

சோர்வுண்டாக்கும் அம்புகளே பிசாசின் வல்ல ஆயுதம்!
(கேளுங்கள்: *''சோர்வுண்டாக்கும் அம்புகள்,''* ஒலித்தட்டு)

இதுபோன்ற பல கேள்விகள் எழும் —
''எனது வாழ்வில் தேவன் இதை அனுமதித்ததேன்?''
''அவரை உத்தமாய்த்தானே சேவிக்கிறேன்?''
— இவை நம்மை முடமாக்கக்கூடியவை

இவ்விடத்தே பவுல் ஒரு சவால்மிகு எடுத்துக்காட்டு —

- ☐ 2 கொரி 4:1,7,16 ... ***ஊழியம்*** ... *இரக்கம் ... சோர்ந்து போகாமல் ... உடல் ... அழிந்தாலும் ...*
- ☐ 7:4,5 ... *போராட்டம் ... பயம் ... தைரியப்* ***பேச்சு***
- ☐ 10:10 ... *உடலில் பலக்குறைவு ... கடும்* ***எழுத்து*** ...
- ☐ 12:7 ... *முள் ... பொறுமையோடு* திடமான அப்போஸ்தலப் பணி (வச 12)

கலாத்திய விசுவாசிகளுக்கும் இப்படியே எழுதுகிறான் —
கலா 4:13,14 ... *உடலில் பலக்குறைவு ... பிரசங்கம்*

எனது சொந்த சாட்சி —
இருதய நோய் (அறுவை சிகிச்சை 1996), விடா முதுகு வலி (தண்டுவட அறுவை சிகிச்சை 2007), தலைச் சுற்று, மூலம், நீரகக்கல், மலேரியா, மஞ்சள் காமாலை, டைபாயிடு, குரல் நாண்கள் சேதம் (மருத்துவ ஆலோசனையை மீறிப் பிரசங்கப்பணி), ...

ஆனாலும், *எனது பலமின்மையில் நிறைவான இறைவன்மை*
(2 கொரி 12:9)

(பார்க்க: பக்கங்கள் 68-70, 259-262, 385-388, 651-656, 691-695)

## 9. வேத வாக்குகளைத் தவறாய் எடுத்தாளக்கூடாது.
Do not misquote Bible Promises.

■ பாடுகள் வழியாய்ச் செல்கையில்,

திருவாக்கு ஏதும் கிடைக்காதா எனத் தேடுவது இயல்பு.

ஆம், திருவாக்குகள் நமக்கு *''ஆறுதல், நம்பிக்கை''* அளிக்கவே —

எபி 6:11,12

ஆனாலும், விவிலியத்திலுள்ள வாக்குகள் ''எங்கு, எப்படி''

பொருந்துமென அறியாவிடில் நமக்கு ஏமாற்றம்தான்—

**சில எடுத்துக்காட்டுகள்**

☐ சுகமளிப்பு குறித்துக் கடவுள் முற்காலத்தில் கொடுத்த

வாக்குகளில் ஒன்று — யாத் 15:26

***''எகிப்தியருக்கு** வரப்பண்ணிய வியாதிகளில் ஒன்றும்''*

*வெட்டுக்கிளிகள் ... தவளைகள் ... எகிப்தின் தெய்வங்கள்*

இஸ்ரவேலருக்கோ குஷ்டம் போன்ற மற்ற வியாதிகள்

இருக்கத்தான் செய்தன!

☐ சுகமளிப்பு ஊழியர் அடிக்கடி குறிப்பிடும் ஒரு திருவாக்கு —

*''தேவன் உங்கள் கண்ணீர் யாவையும் துடைப்பார்!''*

இவ்வாக்கு பைபிளில் **மும்முறை** வருகிறது—

எல்லாமே ''நித்தியத்தை'' அடுத்தவையே —

ஏசா 25:8 ... *மரணம் விழுங்கப்படும்போதுதான்*

வெளி 7:16,17 ... *இனி பசியில்லை, தாகமில்லை*

என்று சொல்லப்படும் காலத்தில்தான்

21:4 ... *இனி மரணமில்லை, வேதனையில்லை*

இன்றோ, யாவுமல்ல, கொஞ்சக் கண்ணீர்தான் துடைக்கப்படும்!

☐ பக்தியுள்ளோருக்கும் பக்தியற்றோருக்கும்

விபத்துக்கள் நேரிடுவது இன்று வெகு சாதாரணம்.

*''**அவரது** எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை!''*

சங் 34:19,20

இது ''மேசியாவுக்கே'' உரிய வாக்குத்தத்தம்.

வச 18,21: *''அவர்கள்''* — அனைவருக்கும் பொதுவானது

வச 19,20: *''அவன்(ர்)''* — மேசியாவுக்குத் தனிப்பட்டது

''இரட்சிப்படைந்த'' திருடனின் எலும்புகளும்

முறிக்கப்பட்டனவே! (யோ 19:32,33,36)

☐ குழந்தையின்மை

அன்னாளுக்கும் எலிசபெத்துக்கும் செய்ததுபோல

மலட்டுத்தன்மையைக் கடவுள் குணமாக்கமுடியும்;

எல்லாருக்கும் அவ்விதம் நடக்காது போகலாம்—

மாற்று முறைகளையும் அவர் தந்துள்ளார்—

(உ-ம்) உபா 25:5,6 ... சகோதரனின் விதவை

இதற்கொப்பாக, நாம் இன்று குழந்தைகளைத் **தத்தெடுக்கலாம்.**

பின்னர் உங்களுக்கே கடவுள் ஒரு குழந்தை தந்தால்,

அது இரட்டிப்பான ஆசீர்வாதம்தானே?

☐ சில பாடுகள் நீடிக்கலாம் —

*''அதிசீக்கிரம்''* என்பதின் பொருளென்ன? (2 கொரி 4:17)

*''நாளுக்கு நாள்''* (வச 16)

*''நித்தியமானவை''* (வச 18)

அதாவது, நித்தியத்தோடு ஒப்பிடுகையில்,

80 ஆண்டுகள்கூட ''அதிசீக்கிரம்தான்!''

☐ சாபத்திலிருந்து கிறிஸ்து நம்மை மீட்டுவிடவில்லையா?

கலா 3:13 ... *''பிரமாணத்தின்'' சாபத்திலிருந்து* மட்டுமே.

அதாவது, *ஆக்கினையில்லை* (வச 10,11).

''பிரசவ வேதனை, வியர்க்க உழைப்பு'' இவைகளிலிருந்தல்ல ...
இவையெல்லாம் **''வீழ்ச்சியின்''** சாபங்கள் (ஆதி 3:16)
அதாவது, நியாயப்பிரமாணம் **கொடுக்கப்படுமுன்!**

☐ எதற்கும் கவலைப்படாதிருங்கள் ... பிலி 4:6,7

இங்கு, பிரச்னைகளுக்குத் ''தீர்வு'' அல்ல,
*புரியமுடியாத ''சமாதானமே''* வாக்களிக்கப்பட்டுள்ளது.

☐ துன்புறுத்தப்படுவதாலும் பாடுபடலாம்—

ஆபிரகாமுக்குத் திருவாக்கு :
*''உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்''* (ஆதி 12:3ஆ)

இயேசு சொன்னதோ:
*''சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்''* (மத் 5:44)

சாது சுந்தர்சிங்: ''சிலுவை சுமப்போரைச் சிலுவை சுமக்கும்!''

☐ ''பிறர்க்குச் செய்ததுபோலவே கடவுள்
உங்களுக்கும் செய்வார்'' என்று சொல்லப்படுவதுண்டு.
செய்வாரா? செய்யலாம், செய்யாதும் போகலாம்!

— கடவுள் பேதுருவைச் சிறையிலிருந்து விடுவித்தார்;
யாக்கோபையோ சிரச்சேதத்திற்கு விட்டுவிட்டார்!

— கடவுள் பவுலை எருசலேமில் முரடர்களிடமிருந்து
தப்புவித்தார்;
ஸ்தேவானையோ கல்லெறிந்து கொல்லப்படவிட்டார்!

— கடவுள் பவுலை அநேகருக்குச் சுகமளிக்கப் பயன்படுத்தினார்;
அவனது முள்ளையோ நீக்கவில்லை,
தீமோத்தேயுவின் வயிற்றையும் குணமாக்கவில்லை!

■ புதிய ஏற்பாட்டு வாக்குகள் பெரும்பாலும் ''ஆன்மீக'' ஆசிகளுக்கே—

2 பேது 1:3,4 ... *மேன்மையான வாக்குகள் ... திவ்ய சுபாவம் ...*
ரோ 8:36-39 ... *கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிக்கமுடியாது.*

## 10. உங்கள் துக்கங்களை வீணடித்துவிடக்கூடாது.

Do not waste your sorrows.

- கடவுளது வழிகளைத் தெளிவாய்ப் பார்க்கக் கண்களைக் கண்ணீர் கழுவுகிறது.

  கண்ணீரின் வழியாய் வானவரின் வானவில்லைக் காணலாம்.
  கண்ணீருக்குத் தூய்மைப்படுத்தும் சக்தியுமுண்டு —
  பிர 7:3 ... *முகத் துக்கம் ... இதயம் சீர்ப்படும்*

  அழுகையின் பள்ளத்தாக்கை நீரூற்றாக்குங்கள் (சங் 84:5-7)
  Baca ⏩ Berachah
  அழுகையின் பள்ளத்தாக்கு முட்கள் நிறைந்திருப்பதால்
  அதைக் கண்ணீரோடும் கஷ்டத்தோடும்தான் கடக்கமுடியும் —
  *... கண்ணீரிலிருந்து களிப்புக்கு ...*

- முடிவில் கடவுள் நமது புலம்பலை நடனக் களிப்பாக்குவார் —

  ☐ சங் 126:4-6 ... *சிறையிருப்பு ... கண்ணீர் ... கதிர்க்கட்டுகள்*
  அதாவது, கனிநிறைவு!

  தாங்கொண்ணா துயராயிருந்தாலும் —
  (உ-ம்) ராகேல் ... எரே 31:15,16,17
  *புலம்பல் ... பிள்ளைகள் ... முடிவு ... நம்பிக்கை*

- பாடுகளின் மகிமையான விளைவை நினையுங்கள் —

  ரோ 5:3,4 ... *பொறுமை ... நற்குணம் ...*
  யாக் 1:2-4 ... *பொறுமை ... பூரணம்*
  வெளி 7:13,14 ... *உபத்திரவம் ... வெள்ளையங்கி ...*

- கீழ்வரும் கோட்பாடுகளை மனதிலிருத்துங்கள்:

  ☐ ஒவ்வொரு பிரச்னையும் ஒரு வாய்ப்பு.
  ☐ மனிதனின் ஏமாற்றங்கள் மகிபன் தரும் ஏற்றங்களாகலாம்.
  ☐ தடைக்கற்கள் படிக்கற்களாகும்.
  ☐ வெற்றியெதுவும் நிரந்தரமல்ல; தோல்வியெதுவும் முடிவானதல்ல.
  ☐ பயணம் கடினமாயிருக்கலாம்; தரையிறங்குதலோ பத்திரமாயிருக்கும்!

சங் 66:10-12 ... *தீ ... வலை ... நீர் ... செழிப்பு*

■ இன்றையப் பாடுகள் VS. வரவிருக்கும் மகிமை

— ரோ 8:18 ... *"நம்மிடத்தில்"*

*அதாவது, நமது **"உடலின்** மீட்பு"* (வச 23)

— 2 கொரி 5:1-3 ... *இவ்வுடலில் பாடுகள் ... விண்ணுலக வீடு*

(வச 6-8) *"தைரியம் ... விசுவாசம் ... நம்பிக்கை"*

■ மக்களிடமிருந்து ஒதுங்கியிருக்க விரும்பாதீர் ...

உங்களது அனலை இழந்துவிடுவீர்! (பிர 4:11)

— சீடரின் ஐக்கியத்தை இயேசு எவ்வளவாய்ப் பாராட்டினார்!

லூக் 22:28-30 ... *எனது சோதனைகள் ... எனது அரியணை!*

அவர்கள் அவரை மறுதலித்து

ஓடிப்போவர் என்று தெரிந்திருந்தும்!

— தானி 3:25 ... **தீயில்** 3 வாலிபரும் சேர்ந்து நடை!

— *ஓர் உறுப்பு வேதனைப்பட்டால், எல்லா உறுப்புகளும் ...*

(1 கொரி 12:26)

■ உங்கள் பாடுகளின்போது, பிறருக்குப் **பணியாற்றுங்கள்** —

2 கொரி 1:3,4 ... *அதே ஆறுதலால் ஆறுதல்படுத்துங்கள்*

இவ்விதம், பாடுகள் பாடல்களாகும்!

துக்கங்கள் துதியாகும்!

■ அமர்ந்திருங்கள்!

☐ வாழ்க்கையில் அதிகக் கவலையும் வேண்டாம்;

அதிகக் கவலையீனமும் வேண்டாம்.

☐ வாழ்க்கையிலிருந்து அதிகம் எதிர்பார்க்காதீர்;

அதிலிருந்து எதுவும் எதிர்பாராதும் இராதீர்.

☐ உங்கள் கவலைகள் வீணாகவிடாதீர்!